# Copy of Deposition

## வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

## அசல் வழக்கு எண்.02/2018

## பிரதிவாதி தரப்பு சாட்சி:1

பெயர்: கார்த்திக் (பி.வா.சா. 1) நாள்: 09.09.2025

த.பெ: ராமசாமி

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் ராமகிருஷ்ணன், அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**பி.வா.சா1 - குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பு):-**

**2017ம் வருடம்** டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் வாதியின் இடத்தை விலைக்கு கேட்டதாகவும், அதற்கு அவர் மறுத்துவிட்டதாகவும், அதனால் அவருடைய இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. 29.12.2017 அன்று நான் எனது அடி ஆட்களை அழைத்து சென்று வாதியின் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு வாதி 21.11.2020ம் தேதி கொடுமுடி காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, நான் தான் கொடுத்தேன். இருவரையும் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். வாதி 21.11.2020 அன்று கொடுத்த புகாரின் அடிப்படையில் தாவா தடத்தில் கற்களை போட்டு இருந்தேன், விசாரணைக்கு பின்னிட்டு

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.09 08:54:04 +0530

போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் எடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வாதி மீது காவல்நிலையத்தில எதாவது புகார் செய்தேனா என்றால் செய்யவில்லை. தாவா சொத்தில் எனக்கு எந்த வித உரிமையும் கிடையாது என்றாலும் நான் தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாத நபர் என்றாலும் சரியல்ல. தாவா படி செலவு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.09 08:54:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.